# செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங், திருச்செங்கோடு

## மருத்துவமுகாம்

திருச்செங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரியில் 23.09.2016 மற்றும் 24.09.2016 ஆகிய தேதிகளில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் SA ரYU நடைபெற உள்ளது. இதன் முன்னோட்ட நிகழ்வாக 19.09.2016 அன்று மருத்துவ முகாம் நடைபெற்றது.

இந்த மருத்துவமுகாம் கல்லூரியின் செயலர் & தாளாளர் பேராசிரியர் A.பாலதண்டபாணி அவர்கள் தலைமையில் கல்லூரியின் முதன்மை செயல் அலுவலர் இன்ஜினியர் A.B.மதன் , வேலை வாய்ப்பு இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு, முதல்வர் முனைவர் R.சதீஸ்குமார் மற்றும் மெடிக்கல் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் துறை தலைவர் மொஹம்மத் சாதிக் ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

முகாமில் இரத்தவகை, இரத்தஅழுத்தஅளவீடு, நுரையீரல் கொள்ளவு மதிப்பீடு, இதய செயல்பாடு அளவீடு (ECG), மூளை செயல்பாடு அளவீடு (EEG), உடல் எடை ,உயரம், உடல் எடை பருமன், உடல் வெப்பநிலை, நாடித் துடிப்பு அளவீடு, இதயத்துடிப்பு விகிதம், இரத்த ஆக்சிஜன் அளவீடு (SPO2), இரத்த சக்கரை அளவீடு ஆகியவை கணக்கீடப்பட்டது.

இந்த முகாமில் 200 கும் மேற்பட்ட இரு பால் பேராசிரியர்கள் பயன்பெற்றனர். இந்த முகாமை செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரியின் மெடிக்கல் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் துறை மாணவ மாணவியர்கள் ஏற்பாடு செய்தனர்.



# செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங், திருச்செங்கோடு

## ஸ்பரிசம்- ஆதரவற்றோருக்கு உதவும் நிகழ்வு

திருச்செங்கோடு செங்குந்தர் காலேஜ் ஆப் இன்ஜினியரிங் கல்லூரியில் 23.09.2016 மற்றும் 24.09.2016 ஆகிய தேதிகளில் தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கம் SA ரYU நடைபெற உள்ளது. இதன் முன்னோட்ட நிகழ்வாக 20.09.2016 அன்று ஸ்பரிசம் என்ற ஆதரவற்றோருக்கு உதவும் விதமாக உணவுப் பொருட்கள், உடை ஆகியவற்றை சேகரிக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வு கல்லூரியின் செயலர் & தாளாளர் பேராசிரியர் A.பாலதண்டபாணி அவர்கள் தலைமையில் கல்லூரியின் முதன்மை செயல் அலுவலர் இன்ஜினியர் A.B.மதன் , வேலை வாய்ப்பு இயக்குனர் அரவிந்த் திருநாவுக்கரசு, முதல்வர் முனைவர் R.சதீஸ்குமார் மற்றும் பேராசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

பேராசிரியர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் ஆதரவற்றவர்களுக்கு உதவும் வகையில் உணவுப்பொருட்கள் , உடை மற்றும் பல பொருட்களை கொடுத்து உதவினர்.

இதனைத் தொடர்ந்து உணவை வீணாக்காதோர் சங்கம், கோயம்பத்தூர் சார்பில் உணவின் முக்கியத்துவம் பற்றியும், அதனை வீணாக்காமல் இருப்பது சம்பந்தமான விழிப்புணர்வு காட்சியளிப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. உணவை வீணாக்கமாட்டோம் என்று மாணவர்களும் பேராசிரியர்களும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (ECE) துறையை சார்ந்த E-Castle மற்றும் மின்னியல் மற்றும் மின்னணுவியல் (EEE) துறையை சார்ந்த Circuitroz சங்கங்களை சார்ந்த பேராசிரியர்களும் மாணவ மாணவியர்களும் செய்தனர்.


Sengunthar College of Engineering
Tiruchengode
Sangyu - 2k16
SPARISM
Organised By
Associations Of
on 20.09.2016


Sengunthar College of Engineering
Tiruchengode
Sangyu - 2k16
SPARISM
To Help Poor & Needy People
Organised By
Associations Of
"E-Castle" & "Circuitr
on 20.09.2016